GODDependence செய்தி மடல்

True freedom is being dependent on God

## பிப்ரவரி | 2026



# " ஒளி அல்லது இருள் "

*– நீங்கள் எதை தெரிந்துகொள்வீர்கள்?*

ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார். ( யோவான் 3: 19-21)

ஜனங்கள் பொதுவாக இருளை விரும்புவதில்லை. வெளிச்சம் வரும்போது, இருளில் மறைத்துவைக்கப்பட்டிருந்தவை எதுவானாலும் அவை வெளிப்படுத்தப்படும். ஒளி மற்றும் இருள் இவ்விரண்டுக்குமான வித்தியாசத்தைப் பற்றி யோவான் எழுதிய நற்செய்தி நூலில் அடிக்கடி வாசிக்கிறோம். மேலும், யோவான் நற்செய்தி நூல் இயேசு கிறிஸ்துவுடன் ஒளியை தொடர்புபடுத்துகிறது. இயேசுகிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் மகத்துவத்தை ஏற்றுக் கொள்கிறவர்கள் கிறிஸ்துவிடம் ஏன் வருவதில்லை? என்று சில நேரங்களில் நாம் ஆச்சரியப்படுகிறோம். நற்செய்தியின் செய்தியைப் புரிந்து கொள்ள முடியாதபடிக்கு அது மறைபொருள் அல்ல. யோவான் 3:19ல், அவ்ர்களுடைய இருதயக் கடினத்திற்கான ஒரு

தேவனையும், மற்றவர்களையும் அன்பு கூரும்படி கற்றுக்கொள்ளுதல் என்கிற இரண்டு காரியங்களை நீங்கள் செய்வதற்காகவே தேவன் இந்த உலகில் உங்களை வைத்திருக்கிறார் என பரிசுத்த வேதாகமம் மிகவும் தெளிவாகக் கூறுகிறது. - ரிக் வாரன்

காரணத்தை நாம் காண்கிறோம், அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகளாக இருப்பதினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் அதிகமாக இருளை நேசிக்கிறார்கள். ஒளியானது இருளிலே பிரகாசித்தாலும், அதை அவர்கள் புரிந்து கொள்ளத் தயாராக இல்லை. கிறிஸ்துவுடனான ஒரு வாழ்க்கை என்பது அனேக கட்டுப்பாடுகளும், சட்டதிட்டங்களும் நிறைந்த கடினமான ஒரு வாழ்க்கை என பலர் (சில கிறிஸ்தவர்களும் கூட) நினைகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவிடம் வந்தால், தங்கள் சுதந்திரம் பறிபோய்விடும் என்று பயப்படுகின்றனர். தாங்கள் செய்வது தீமையானது என்று அறிந்திருந்தாலும் கூட, கட்டுப்பாடற்ற தங்கள் வாழ்க்கையை தொடரவே அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே, அவர்களுடைய வாழ்க்கையில், செய்கைகளின் மீது ஒளியானது பிரகாசிக்கும்போது, அவர்கள் இருளில் தங்களை மறைத்து, ஒளித்துக் கொள்கிறார்கள்.

மறுபக்கத்திலோ, சத்தியத்தின்படி வாழ்கிற எவரும் மகிழ்ச்சியுடன் ஒளியினிடம் வருகிறார்கள். இருளில் வாழ விரும்புகிறவர்கள் மற்றும் தேவனுடைய சத்தியத்தின்படி வாழ விரும்புகிறவர்கள் ஆகிய இருவருக்குமிடையேயான மனப்பான்மையில் உள்ள வித்தியாசத்தை நன்கு கவனியுங்கள். ஒளியானது எல்லா கிரியைகளின் உண்மையான தன்மையை - அது நல்லதா அல்லது கெட்டதா- என்பதை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் ஒளியில் வாழ்வது என்பது சுமை அல்ல, அது காரியங்களை நாம் தெளிவாகக் காணக்கூடிய இனிமையான ஒரு அனுபவம் ஆகும். மேலும், இது சங்கடம், பயம், வரக்கூடிய எதிர்மறையான பின்விளைவுகளைப் பற்றிய கவலைகள் மற்றும் அவமானம் என எதையும் தருவதில்லை. மாறாக, நாம் தேவனுடன் ஒரு அன்பின் உறவைப் பெற்றனுபவிப்பதால், அது ஜீவனையும், மகிழ்ச்சியையும், பரலோக வாழ்வின் முன்சுவையையும் நமக்குத் தருகிறது. இருளை நேசிக்கிறவர்கள் தங்களுடைய முடிவு மற்றும் ஆக்கினைத் தீர்ப்பை ஏற்கனவே தெரிவு செய்துவிட்டார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டும் என்ற நம் தீர்மானம், நம் ஆன்மீக வாழ்வில் ஜீவனைத் தந்து, கிறிஸ்துவின் ஒளியில் எவ்வித பயமும் இன்றி வாழ நமக்கு உதவுகிறது.

“தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்” (நீதிமொழிகள் 28:13) என பரிசுத்த வேதாகமம் மிகத்தெளிவாகக் கூறுகிறது. இயேசுவுக்கு மிகவும் பிரியமான சீடரான அப்போஸ்தலனாகிய யோவான் நமக்கு கூறுவது என்னவெனில், “ தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை, இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு, உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1:5-9). நாம் எவ்வளவு சீக்கிரமாக ஒளியினிடத்திற்கு வருகிறோமோ அவ்வளவு சீக்கிரமாக தேவனுடைய இரக்கத்தைப் பெற்று, அவருடைய அன்பின் ஐக்கிய உறவில் மகிழ்வதற்கான அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம். முடிவு நம் கைகளில்தான் இருக்கிறது. ஒளி அல்லது இருள் - நீங்கள் எதை தெரிந்துகொள்வீர்கள்?

-சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூரு.

இறுதியில், மாற்றப்பட்ட வாழ்க்கையும், இயேசுகிறிஸ்துவுடனான ஆழமான மற்றும் நிலையான உறவுமே தனிப்பட்ட வேத ஆராய்ச்சியின் குறிக்கோள் ஆகும். - கே ஆர்தர்

# ஆசிரியரிடமிருந்து....

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ளவும் தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த ஆண்டில் முதல் மாதம் முழுவதும் தேவன் நம்மை சுக பத்திரமாக பாதுகாத்து வழிநடத்தினதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துவோம். தேவன் ஒரு நோக்கத்தோடும் திட்டத்தோடும் கிருபையாக நமக்கு காலங்களை கூட்டிக் கொடுத்திருக்கிறார் என கடந்த மாதத்தில் சிந்தித்தோம். இந்த ஒரு மாதத்தில் அவர் எதிர்பார்க்கும் கனிகளை நாம் எந்த அளவுக்கு கொடுக்க ஆரம்பித்தோம்?

இந்த மாதத்தில் நாம் மீண்டும் ஒரு லெந்து காலத்தை அனுசரிக்க இருக்கிறோம். இந்த வருடத்தில், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் என இருபெரும் மதத்தினரும் கிட்டத்தட்ட ஒரே நாளில் இந்த உபவாசத்தை (நோன்பை) ஆரம்பிக்க இருப்பது ஒரு புதுமையான ஒன்று. நோன்பு என்ற வார்த்தைக்கு சொந்தக்காரர்கள் ஆகிவிட்டார்கள் இஸ்லாமியர்கள். இஸ்லாமியரைக் காட்டிலும் கிறிஸ்தவர்களுடைய உபவாசம் எப்படி சிறந்ததாக இருக்க வேண்டும் என சிந்திப்பதைக் காட்டிலும் வேதாகமத்தின் அடிப்படையில் நாம் உபவாசத்தை எப்படி அனுசரிக்க வேண்டும் என சிந்திப்பது நல்லது.

இயேசு கிறிஸ்துவின் மலைப் பிரசங்கம் உள்ளடக்கிய மத்தேயு நற்செய்தி நூலின் மூன்று அதிகாரங்களில், அவற்றில் மையமான அதிகாரன 6 ம் அதிகாரத்தில் 1 முதல் 18 உள்ள வசனங்களில் இயேசுகிறிஸ்து கூறிய மூன்று முக்கிய காரியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தானதர்மம், ஜெபம் மற்றும் உபவாசம் என்ற மூன்று முக்கிய ஆவிக்குரிய பயிற்சிகளை ஒருவர் கடைபிடிக்கும் போது மாயக்காரர் போன்று அல்லாது உண்மைக் கிறிஸ்தவராக நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டிருப்பதை காண்கிறோம்.

**தானதர்மம் (வ 1-4):** அனேகர் காண வேண்டும் என்பதற்காக விளம்பரப்படுத்தி அனைவருடைய பார்வையில் அங்கீகாரத்திற்காக செய்யாமல், அந்தரங்கமாக விளம்பரமின்றி உண்மையான கரிசனையுடன் செய்ய வேண்டும். முதலாவது முறையில் செய்யும்போது பலன் உடனடியாக கிடைக்கும், அனால் அது அத்துடன் முடிந்து விடும். ஆனால் அதனை தேவன் எதிர்பார்க்கும் விதத்தில் செய்யும் போது, ஒருவேளை நமக்கு உற்சாகம் இல்லாமல் இருக்கலாம், அற்ப பலன் கிடைக்காமல் போகலாம், ஆனால் பரலோகத்தில் அதன் பலன் பிதாவிடமிருந்து நிச்சயமாக உண்டு.

**ஜெபம்; வ (5-8)** நாம் ஜெபம் செய்வதும் மற்றவர்கள் அறிய வேண்டும் என்பதற்காக பொது இடங்களில் மட்டும் ஜெபிப்பதும் மற்றவர்களைக் கவருவதற்கான பகட்டான வார்த்தைகளினால் நீண்ட ஜெபமாகவும் இருக்க வேண்டியதில்லை. மற்றவர்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும் அந்தரங்கமாக பிதாவை நோக்கி ஜெபம் செய்யும் போது, மற்றவர்களுடைய அங்கீகாரம் நற்பெயர் நமக்கு கிடைக்காமல் இருக்கலாம், ஆனால் தேவன் எதிர்பார்க்கும் விதமாக நாம் ஜெபம் செய்யும் போது வெளியரங்கமான பலன் பிதாவினால் நமக்கு கிடைக்கும், நமது ஜெபமும் கேட்கப்படும்.

**உபவாசம்: (வச 16-18)** நாம் உபவாசிக்கும்போது மற்றவர்கள் காண வேண்டும் என்பதற்காக நமது முகம் வாடலாக இருக்கக் கூடாது. தலைக்கு எண்ணெய் பூசி, முகத்தைக் கழுவி மற்றவர்கள் பார்வையில் வழக்கமாக இருப்பது போன்ற தோற்றத்தில் ஆனால் அந்தரங்கத்தில் உண்மையாகவே நாம் உபவாசம் இருக்கும் போது மற்றவருடைய அங்கீகாரம் நமக்கு கிடைக்காமல் இருக்கலாம், ஆனால் அப்படிப்பட்ட உபவாசத்தில்

தேவனுடைய வார்த்தையைப் பற்றி அசதியாக இருப்பதைக் காட்டிலும் அதிக ஆபத்தானது என்று எதுவுமில்லை. ஒருவர் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்துக் கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக தேவனுடைய வார்த்தையை அவமதிக்க ஆரம்பித்து, முடிவில் கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் இழந்துவிடுகிறார். - மார்ட்டின் லூத்தர்

தேவன் பிரியமாய் இருந்து வெளியரங்கமாக பலன் அளிப்பார்.

அப்படியானால் இந்த லந்து காலத்துக்களில் நாம் சபையாக குழுக்களாக லந்து கால உபவாசத்தை அறிவித்து அனுசரிப்பது மாயக்காரர் போன்ற நடவடிக்கையாகாதா? என நமக்கு எண்ணம் வருவது உண்மைதான். மாயக்காரர்களின் உள்ளான நோக்கத்தை மனதிற்கொண்டு அந்த விதமாகவே இந்த இந்த நாட்களை நாம் அனுசரித்தால் அது அப்படிதான் மனித அங்கீகாரம் உடனே கிடைக்கும் மேற்கொண்டு தேவனிடமிருந்து பதில் / பலன் கிடைக்கப் போவதில்லை. ஆனால் இத்தகைய குழு முயற்சிகளை ஒரு உந்து சக்தியாக நாம் மனதில் எடுத்துக் கொண்டு எந்த காலத்தில் உபவாசம் ஜெபம் இதனை முன்னிட்டு தானதர்மம் போன்ற நற்காரியங்களில் அமைதியாக அந்தரங்கமாக விளம்பரம் இன்றி நமது நேரம் தாலந்து பொருட்களை தேவ நாம மகிமைக்காக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது இம்மையில் பலன் கிடைக்கலாம் கிடைக்காமல் போகலாம் ஆனால் மறுமையில் பலன். நிச்சயம் உண்டு இந்த எண்ணத்துடன் எந்த நாட்களை நாம் தனிப்பட்ட முறையில் அனுசரிப்பதை நோக்கமாக கொள்வோம்

வழக்கம்போல, ஏழாவது வருடமாக ரமலான் காலத்தில் 30 நாட்களில் முழு வேதாகமத்தையும் அதன் கால வரிசையின் அடிப்படையில் வாசித்து முடிக்கும் சவால் இந்த வருடம் பிப்ரவரி 18ல் ஆரம்பிக்கிறது. அதே நாளில் இரண்டாவது வருடமாக 40 நாட்களில் முழு வேதாகமத்தையும் கால வரிசையை கையில் வாசித்து முடிக்கும் லெந்து கால வேத வாசிப்பு சவால்களும் ஆரம்பிக்கின்றன. இவ்விரண்டு வேதவாசிப்பு சவால்களுக்கும் வெவ்வேறு நோக்கங்களும் நடைமுறைகளும் இருப்பதினால் தங்களுக்கு பொருத்தமான ஒரு சவாலில் இந்த நாட்களில் இணைந்து கொள்ளும்படி உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். ஏற்கனவே ஒரு வேதவாசிப்பு சவாலில் இருந்து வாசிப்பவர்களும் இத்தகைய சவால்களிலும் கூடுதலாக இணைந்து கொள்ளலாம்.

ஜனவரி 31 அன்று நடைபெற்ற "வேத வாசிப்பும் ஆவிக்குரிய உருவாக்கமும்" என்ற தலைப்பில் நடைபெற்ற வேதாகம கருத்தரங்கில் (Talk Show) அநேகர் கலந்து கொண்டு, நடைமுறை ஆலோசனைகளைப் பெற்று பயன் அடைந்தனர். அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். ஆங்கில மொழியில் ஜனவரி 26 அன்று நடைபெற்ற ஆறு மணிநேர தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சியிலும் அநேகர் உற்சாமாக கலந்து கொண்டனர். மாதந்தோறும் இத்தகைய கருத்தரங்குகளும் நேரலை வேதவாசிப்பு நிகழ்ச்சிகளும் தடையின்றி நடைபெறவும் அதன் மூலம் அனேகர் பயன் பெறவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த வருடத்தில் வேத தியான குழுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும், அதற்கான ஆயத்தப் பணிகள் விரைந்து செய்யப்பட வேண்டும். ரமலான் மற்றும் லெந்து கால வேதவாசிப்பு சவால்கள் நிறைவடைந்த பின்னர், இந்த நடவடிக்கைகள் தடையில்லாமல் முன்னெடுக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பிப்ரவரி 2026 வேத வாசிப்பு சவால்களைத் தொடங்கும் போதும் நமது 3 எண்களும் மீண்டும் வாட்சாப்பில் spam பிரச்சனைகளை சந்தித்தன. தொடர்ந்து 3 எண்களும் spam பிரச்சினைகளில் இருந்து பாதுகாக்கப்பட, இவற்றில் தேவனுடைய கிருபை விளங்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மாதம்தோறும் வெளிவரும் நமது செய்திமடல்களை நீங்கள் தவறாமல் வாசிப்பீர்கள் என நம்புகிறோம். இந்த செய்தி மடல்கள் குறித்த உங்கள் கருத்துக்கள் அதில் உள்ள கட்டுரைகளில் எழும் சந்தேகங்கள் மற்றும் விளக்கங்களை அவ்வப்போது எங்களுக்கு தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**



# துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - பிப்ரவரி 2026

## துதிப்போம்:

- 1. 2026 ஜனவரி மாதத்தில் தங்கள் வேத வாசிப்பை நிறைவு செய்த ஒவ்வொருவருக்காக..
- 2. 2026 ஜனவரி 26 ம் தேதி அன்று ஆங்கிலத்தில் நடந்த தொடர் வேத வாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சியில் அநேகர் கலந்து கொண்டு வேதாகமத்தை வாசித்ததற்காக..
- 3. 2026 ஜனவரி 31, அன்று தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ”வேதவாசிப்பும் ஆவிக்குரிய உருவாக்கமும்” என்ற தலைப்பில் நடந்து முடிந்த GODependence கருத்தரங்குகளில் அநேகர் கலந்து கொண்டு பயன்பெற்றதற்காக. அதில் பகிரப்பட்ட காரியங்கள் ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதமாக இருந்ததற்காக.
- 4. 2026 பிப்ரவரி மாத வேத வாசிப்பு குழுக்கள் பல தடைகளையும் தாண்டி தொடங்கப்பட ஆண்டவர் உதவியதற்காக.
- 5. ஆண்டவர் இம்மட்டும் நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிற சுகம், பெலன், ஜீவனுக்காக..

## ஜெபிப்போம்:

- 1. நமது வேதவாசிப்பு குழுக்களில் இணைந்துள்ளவர்களில் பெலவீனத்தோடும் சுகவீனத்தோடும் இருக்கின்ற ஒவ்வொருவரும் ஆண்டவரால் பெலப்படுத்தப்பட, சுகப்படுத்தப்பட. தங்களுக்கு அன்பானவர்களை இழந்து தவிக்கின்ற குடும்பத்தின் மக்களுக்கு ஆண்டவர் ஆறுதலை தர.
- 2. வேத வாசிப்பு சவால்களுக்கு பயன்படுத்தும் GODependence ன் 3 WhatsApp எண்களும் spam பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டு வருகிறது.. தொடர்ந்து 3 எண்களும் spam பிரச்சினைகளில் இருந்து பாதுகாக்கப்பட.
- 3. 2026 பிப்ரவரி மாதம் 3ம் வாரத்தில் துவங்க இருக்கிற ரம்ஜான் மற்றும் லெந்து கால வேத வாசிப்பு சவால் குழுக்களில் அநேகர் இணைந்து வேதம் வாசிக்க / ஜெபிக்க முன்வர.
- 4. சிறுவர் வேதவாசிப்பு சவால் குழுக்களில் (CBRC) இணைந்து இருக்கும் பிள்ளைகள் இந்த மூன்றாம் பருவத்தில் துவங்கி இருக்கும் வேத வாசிப்பை வெற்றிகரமாக முடிக்க மற்றும் கொடுக்கப்படுகின்ற வேத வசனங்களை மனனம் செய்ய. அதன் மூலம் தேவனுடைய வல்லமையை உணர்ந்து கொள்ள.
- 5. 10 மற்றும் 12 ம் வகுப்பு பொதுத்தேர்வுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். விசேஷித்த ஞானத்தை பிள்ளைகள் தேவனிடத்தில் இருந்து பெற்றுக்கொள்ள, தேர்வுக்கு தங்களை சரியானபடி ஆயத்தமாக்கிக் கொள்ள.

தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தினால் நம் மனங்களை நாம் நிரப்பும்போது, நம் சிந்தனைகளில் உள்ள புரட்டுகளையும், இந்த உலகம் நம்மீது திணிக்க விரும்பும் பொய்களையும் நாம் எளிதில் அடையாளம் கண்டுகொள்வோம். - பெயர் அறியப்படாதவர்

# திருச்சபைச் சீர்திருத்தத்தின் முழக்கங்கள்

### முழக்கம்: 2. விசுவாசம் மட்டுமே!- (Faith Alone)

கிறிஸ்தவ வாழ்வில் எல்லாமே விசுவாசத்தைச் சார்ந்ததுதான். “விசுவாசத்தைத் துவக்குகிறவர், முடிக்கிறவர்” என்பவரே நமது தலைவர் (எபிரெயர் 12:1,2). “விசுவாச வீட்டார்” என்பதே திருச் சபை எனும் நமது சமுதாயம் (கலாத்தியர் 6:10). “விசுவாசத்தின் ஆவி” என்பதே நமது உயிர் மூச்சு (2 கொரிந்தியர் 4:13). “விசுவாச வார்த்தை” என்பதே நமது செய்தி (ரோமர் 10:8). “விசுவாசமுள்ள ஜெபம்” என்பதே நமது விண்ணப்பம் (யாக்கோபு 5:15). “விசுவாசத்தில் குமாரர், குமாரத்திகள்” என்பவரே நமது நற்செய்திப்பணியின் கனிகள் (1 தீமோத் தேயு 1:2). “விசுவாசத்திற்கான போராட்டம்” என்பதே நமது யுத்தம் (1 தீமோத்தேயு 6:12). ஆதிச் சபையின் வரலாற்றுப் புத்தகமாகிய அப்போஸ்தலர் நடபடிகளில் “விசுவாசி” எனும் சொல் எத்தனை முறை வருகிறதென்று பாருங்கள்!

இது எளிமையாய்த் தோன்றினாலும், இவ்விதக் கன்னி விசுவாசத்தைக் காத்துக்கொள்ள நாம் “போராட” வேண்டும். இதோ, அப்போஸ்தலன் பவுலின் சாட்சி: “நல்ல போராட்டத்தைப் போராடி னேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்” (2 தீமோத்தேயு 4:7). “ஒரே தரம் பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காய்த் தைரியமாய்ப் போராடவேண்டும்” என்று அப்போஸ்தலன் யூதா அழைக்கிறார் (யூதா 3). “எல்லாவற்றுக்கும் மேலாக” நாம் விசுவாசம் எனும் கேடகத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டுமாம் (எபேசியர் 6:16). தொடர் பணிக்கான தங்களது மிஷனரிப் பயணத்தின்போது அப்போஸ்தலர் பவுலும் பர்னபாவும் புதிய விசுவாசிகளுடைய மனதைத் திடப்படுத்தி, “விசுவாசத்தினால் நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி, நாம் அநேக உபத்திரவங்கள் வழியாய் இறையரசில் நுழைய வேண்டும்” என்றனர் (அப்போஸ்தலர் 14:22). ஆம், எதிர் நீச்சல் போட்டுத்தான் கிறிஸ்தவ வாழ்வில் விசுவாசத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியும்!3231 பொன்னிலும் விலையுயர்ந்த நமது விசுவாசம் பல அக்கினிப் பரீட்சைகளினால் சோதிக்கப்படும் (1 பேதுரு 1:6,7). இயேசுவைப் பொருத்தவரை, நாம்

ஜெபமும் வேத வாசிப்பும் பிரிக்கப்பட முடியாதபடி ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. நாம் தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போது, தேவ ஆவியானவரின் தூண்டுதலினால் பயனுள்ள ஜெபம் பிறக்கிறது. - பில்லி கிரஹாம்

முடிவு காலத்திற்குள் வர வர விசுவாசத்தைக் காத்துக் கொள்வது கடினம்தான் (லூக்கா 18:8). அப்படியானால், “கிரியை இல்லாத விசுவாசம் செத்தது” எனும் கூற்றின் பொருளென்ன? (யாக்கோபு 2:17). தானதர்மச் செயல்களையே இப்பகுதியில் அப்போஸ்தலன் யாக்கோபு குறிப்பிடுகிறார் (வச 14&16). கிரியைகளை இரட்சிப்புக்கு நிபந்தனையாய் அல்ல, அதற்கு நிரூபணமாய்ப் பேசுகிறார்.

எபேசியர் 2:9,10இல் அப்போஸ்தலன் பவுல் இதைத் தெளிவாக்குவதைக் கவனியுங்கள்: “கிரியை களினால் அல்ல, நற்கிரியைகளைச் செய்வதற்காய் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் படைக்கப்பட்டி ருக்கிறோம்” (Not BY works, but FOR works!). இரட்சிப்பை முக்காலங்களில் பார்க்கவேண்டும்: (அ) கடந்த கால இரட்சிப்பு – “நாம் விசுவாசிகளானபோது” (ரோமர் 13:11) – பாவத்தின் தண்டனையிலிருந்து விடுதலை. (ஆ) நிகழ் கால இரட்சிப்பு – “இரட்சிப்பு இப்பொழுது சமீபம்” (ரோமர் 13:11) – பாவத்தின் வல்லமையிலிருந்து விடு தலை. இங்குதான் பயத்தோடும் நடுக்கத்தோடும் நமது இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவேண் டும் (பிலிப்பியர் 2:12). அதாவது தேவ மகிமைக்காக அவரது “மாசற்ற பிள்ளைகளாய்” நடந்துகொள்ள முயலவேண்டும் (வச 15). (இ) எதிர்கால இரட்சிப்பு – “தமக்காக (விசுவாசத்துடன்) காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாம் தடவை பாவமில்லாமல் கிறிஸ்து தரிசனமாவார்” (எபிரெயர் 9:28) – பாவத்தின் பிரசன்னத்திலிருந்தே விடுதலை. இது நமது சரீர மீட்பையும் உள்ளடக்கும் (ரோமர் 8:23).

விசுவாசத்தைக் குறித்துப் பேசும்போது பெற்றோரது பொறுப்பையும் இங்கு குறிப்பிடவேண்டும். தாய் தந்தையரும், பாட்டி தாத்தாவும் விசுவாசத்தில் உறுதியாயிருந்து அதனைப் பிள்ளைகளுக்கும் பேரப் பிள்ளைகளுக்கும் கடத்தவேண்டும். தீமோத்தே யுவின் பாட்டி லோவிசாளும், தாய் யூனிக்கேயாளும் இதற்கு முன்னுதாரணமாய்த் திகழ்ந்தனர் (2 தீமோத் தேயு 1:5). துர்ப்பாக்கியமாக, கர்த்தரைவிடக் கம்ப்யூட்டரில்தான் நமது பிள்ளைகளுக்கு அதிக நம்பிக்கை! தனது விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்திவிடாதபடி இங்குதான் குறிப்பாய்த் தீமோத்தேயுவை அப்போஸ்தலன் பவுல் எச்சரித்தார் (1 தீமோத்தேயு 6:20,21).

நீங்கள் பரிசுத்த வேதாகமத்தை நேசிக்கவில்லை எனில், நிச்சயமாகவே நீங்கள் அதைத் தந்த தேவனையும் நேசிக்கவில்லை. - சார்லஸ் ஸ்பர்ஜன்

பாடுங்கள் –

பிளவுண்ட மலையே,


புகலிடம் ஈயுமே,

பக்கம் பட்ட காயமும்,

பாய்ந்த செந்நீர் வெள்ளமும்

பாவ தோஷம் யாவையும்

நீக்கும்படி அருளும்.



எந்தக் கிரியை செய்துமே,

உந்தன் நீதி கிட்டாதே,

கண்ணீர் நித்தம் சொரிந்தும்

கஷ்ட தவம் புரிந்தும்,

பாவம் நீங்க மாட்டாதே,

நீரே மீட்பர் இயேசு

------------ தொடரும்

**(சகோ. R. ஸ்டான்லி அவர்கள் எழுதிய "நான் நிற்கும் கன்மலை" என்ற நூலில் இருந்து)**

## நமது தரிசனம் & நமது பணித்திட்டம்

### நமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

GODependence

### நமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

மனிதர்கள் வழிதவறிப் போகமுடியாதபடிக்கு தேவனுடைய வார்த்தையானது அவர்களுடைய பாதைக்கு வெளிச்சம் காட்டாவிடில், அவர்களின் வாழ்க்கையானது இருளும் பனியும் சூழ்ந்ததாக இருந்திருக்கும். - ஜான் கால்வின்

# வேதவாசிப்பு சவால்கள்

## 2026 மார்ச் 01 முதல்

**”நீங்கள் தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போது, “இது என்னைப் பற்றி, என்னிடம் பேசுகிறது” என்பதை எப்பொழுதும் உங்களுக்குள் சொல்லிக் கொள்ள வேண்டும்.” - சோரன் கியர்கெகார்ட்**

புத்தாண்டு தீர்மானங்களின் ஒரு பகுதியாக ஜனவரி 2026 முதல் நீங்கள் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கத் தொடங்கியிருப்பீர்கள். இன்றைய நிலவரப்படி உங்களால் அதனைத் தொடர்ந்து வாசித்து வர முடிந்ததா?

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 மார்ச் 2026 முதல் தொடங்கும் ”வேத வாசிப்பு சவால்களுக்கு” GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.




தேவனுடைய வார்த்தையை வாசிக்கும் கடமையில் நாம் தவறிவிடுகிறோம்... அறிவுக்கூர்மை இல்லாததோ அல்லது ஆர்வமின்மையோ அல்ல நம் பிரச்சனை. சோம்பேறிகளாக இருப்பதுதான் நமது பிரச்சனை. - ஆர்.சி. ஸ்ப்ரௌல்

# வேதவாசிப்பு சவால்கள்

## 2026 மார்ச் 01 முதல்

**பின்வருவன நமது வேத வாசிப்புச் சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள்:**

🧑‍⚖️♀️ “இது உண்மையிலேயே ஒரு சிறந்த அனுபவமாக இருந்தது. என் வாழ்க்கையில் முதல்முறையாக முழு வேதாகமத்தையும் வாசித்து முடித்தேன். இது தேவனை மேலும் அறிந்து கொள்ள எனக்கு மிகவும் உதவியது. இந்த சவால் தேவனோடு நெருக்கமான உறவை ஏற்படுத்த உதவியது.” **– Sophia R.**

🧑‍⚖️♀️ “வேதாகமத்தை முழுமையாக வாசிக்கக கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டேன். இந்த சவாலில் பங்கு பெற்று வேதாகமத்தை மூன்றாவது முறையாக வாசித்து முடித்தேன். அதற்கு அவர்கள் அளித்த ஊக்குவிப்பே காரணம்.” **- குமாரி ராஜன்**

🧑‍⚖️♀️ ”படிப்பதற்கு எளிதாகவே இருந்தது .இதுவரை எட்டு முறை முழு வேதாகமத்தையும் வாசித்து முடிப்பதற்கு இந்த சவால் உதவியாக இருந்தது. தொடர்ந்து இந்த சேவையை செய்யுங்கள். நன்றி.” **- R. பரமேஸ்வரி**

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 மார்ச் 2026 முதல் தொடங்கும் ”வேத வாசிப்பு சவால்களுக்கு” GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

**இதன் சிறப்பு அம்சங்கள்:**

✴ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✴ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✴ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

இயேசுவைப் பாருங்கள். அவர் பிரச்சனையில் இருந்த ஒவ்வொரு சமயமும் தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தினார். அவர் சோதிக்கப்பட்டபோதும், சிலுவையில் பாடனுபவித்துக் கொண்டிருந்தபோதும் அவர் வார்த்தையைப் பயன்படுத்தினார். - திமோத்தி கெல்லர்

# வேதவாசிப்பு சவால்கள்

## 2026 மார்ச் 01 முதல்

✷ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✷ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✷ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✷ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✷ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

“ எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்புச் சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு கால அளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

-̇ GODependence குழு

CLICK HERE wa.me/96565962559

**** ☝ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே! ”

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

**1 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 45 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
2 மணி 30 நிமிடங்கள்

**2 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 22 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
1 மணி 30 நிமிடங்கள்

**3 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 15 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
60 நிமிடங்கள்

**உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி**

**4 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 11 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
45 நிமிடங்கள்

**6 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும் 7 அல்லது 8 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
25 நிமிடங்கள்

**1 வருட வேதவாசிப்புச் சவால்**
தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
15 நிமிடங்கள்

இன்னும் தாமதம் ஏன்?
இன்றே சேருங்கள்.

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

GODependence
True freedom is being dependent on God

# Bible Reading Challenges

## GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

**முறையாக மற்றும் முழுமையாக**
**வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc

நாம் எந்தளவுக்கு குறைவாக வேதாகமத்தை வாசிக்கிறோமோ, வேதத்தை வாசிக்க வேண்டும் என்ற விருப்பமும் அந்தளவுக்கு குறைவாகவே இருக்கும். மிகவும் குறைவாகவே ஜெபிக்கும்போது, ஜெபிக்கும் விருப்பமும் குறைவாகவே இருக்கும். - ஜார்ஜ் முல்லர்

# வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 16

## வேதப்பகுதி: 2 தீமோத்தேயு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1→↓ | | | | | | ■ |
| | | | | ←2 | | ↓3 |
| | | | | ←4 | | |
| 5→ | | | | | ↑6 | |
| 7→ | 8→ | | | ■ | ■ | |
| ■ | 9↑ | 10→ | | | | |
| 11→ | | | | | | |

### ➡ இடமிருந்து வலம்

1. கட்டப்பட்டிருக்கவில்லை, எது? (6)
5. தீமோத்தேயுவுக்குள் இருப்பது மாயமற்ற ___ (5)
7. பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்தவன் (2)
8. ஊழியத்தில் பவுலுக்கு பிரயோஜனமானவன் (3)
10. கொரிந்து பட்டணத்தில் இருந்துவிட்டான் (4)
11. சீர்கேடானவை (7)

### ⬅ வலமிருந்து இடம்

2. பவுலுக்காக வைக்கப்பட்டிருப்பது நீதியின் __ (4)
4. பவுலின் மேலங்கி யார்வசம்? (4)

### ⬇ மேலிருந்து கீழ்

1. வேத வாக்கியங்களை அருளியவர்(4)
3. தீமோத்தேயுவின் தாய் (6)

### 🔼 கீழிருந்து மேல்

6. இயேசுவால் பரிகரிக்கப்பட்டது (4)
9. ஒநேசிப்போர் பவுலை தேடி கண்டுபிடித்த இடம்(2)

**குறிப்பு** : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

CLICK HERE https://forms.gle/rPeteZBRTRA1Pzq98

கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/02/2026க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## நாடக ஆசிரியர் அருட்பணியாளராதல்
# அதோனிராம் ஜட்சன்
## (1788-1850)

### சிறைக்கூடத்தில்:

[சென்ற மாத இதழின் தொடர்ச்சி ...

சக்கரவர்த்தி இருந்த இடமாகிய ஆவா பட்டணத்திற்கு ஜட்சனும் அவர் மனைவியும் சென்றபோது அவர்கள் அங்கே சரியான முறையில் வரவேற்கப்படவில்லை. பிரிட்டனுக்கும், பர்மாவுக்கும் இடையே யுத்தம் நடந்தபடியால் வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் எல்லாரும் ஒற்றர்களாக எண்ணப்பட்டார்கள். ஜட்சன் கைது செய்யப்பட்டு 20 மாதங்களாக சிறைக்கூடத்தில் வைக்கப்பட்டார். சிறைக்கூடம் எல்லாவிதமான கொடுமைகளுக்கும், அசுத்தமான நிலைகளுக்கும் உரியது. ஜட்சனுடைய கால்கள் விலங்கிடப்பட்டன. நடுவே நீண்ட கோல் ஒன்று செலுத்தப்பட்டு தூக்கி வைக்கப்பட்டபடியினாலே அவர் தலை, தோள் ஆகியவை மட்டுமே தரையில் படத்தக்கதாக வைக்கப்பட்டார். சங்கிலிகள் அவர் கால்களில் உள்ள சதையை அதிகமாகக் கிழித்தபடியினாலே வலியின் வேதனையால் துன்பப்படுத்தப்பட்டார். அவருக்கு எந்தவிதமான ஆகாரமோ தண்ணீரோ கொடுக்கப்படவில்லை. காலையில் ஒருசில நிமிடங்கள் மட்டுமே அவர் சுத்தமான காற்றை சுவாசிப்பதற்கும், உடற்பயிற்சிக்கென்றும் சிறைக்கூடத்தை விட்டு வெளியே அனுமதிக்கப்படுவார். சிறிதுநேரம் கழித்து மறுபடியுமாக சிறைக்கூடத்தில் அடைத்துவிடுவார்கள். இவ்விதமான சங்கடமான நிலையில் அவர் வைக்கப்பட்டார். அவருக்கு உணவையும், தண்ணீரையும் ஆன் அம்மையார் கொண்டு வந்தார்கள். அனுதினமும் அதிகாரிகளைப் பார்த்து தன் கணவனை விடுவிக்கும்படியாக அதிகமாக மன்றாடினார்கள். இறுதியாக ஜட்சன் ஒரு திறந்த கூடத்திற்கு மாற்றப்பட்டார். அவர் மனைவி ஆன் அம்மையார் தினமும் இருள் கவ்வும் வேளையில் அவரைச் சந்தித்து வந்தார்.

அவர்கள் இதுவரைக்கும் மொழிபெயர்த்திருந்த வேதாகமப் பகுதிகளைப் பர்மிய அரசாங்கம் அழித்துவிடும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. எனவே, ஆன் அம்மையார் அந்த மொழிபெயர்ப்பு பிரதிகளை எல்லாம் சேர்த்து ஒரு தலையணைப்போல் தைத்துச் சிறைச்சாலைக்குக் கொண்டு வந்து ஜட்சனிடம் கொடுத்தார். மிக கவனத்துடனும், பொறுப்புடனும் ஜட்சன் தன் தலைக்குச் சீராக இதம் அளிக்கும் தலையணைப்போல் இரவு பகலாகப் பத்திரமாக அதை வைத்துக் கொண்டார்.

ஆன் அம்மையாருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அருமையாக தான் பெற்றெடுத்த அக்குழந்தையை அதன் தந்தை காண சிறைக்கூடத்திற்குக் கொண்டு வந்தார். ஆனால், ஜட்சன் காவல் நிறைந்த இருளான சிறைக்கூடத்துள் அடைக்கப்பட்டிருந்தார். சிறைக்கூடத்தின் கதவுகள் அல்லது அங்கே உள்ள சிறிய இடைவெளியின் வழியாக வரும் காற்றையே சுவாசிக்க வேண்டிய நிலையில் இருந்தார். சிலநாள் கழித்து அவரும் அவரோடு இருந்த சிறைக் கைதிகளும் திடீர் என்று சற்று தூரத்திற்கு அப்பால் உள்ள ஒரு கிராமத்திற்குக் கொண்டு போகப்பட்டார்கள். காய்ச்சலினாலும், நோயினாலும் ரத்தம் வடியும் கால்களோடும் இருந்த இவர்கள் மிகவும் வேதனையோடு நடந்தே சென்றனர். ஆன் அம்மையாரும் தன் குழந்தையுடன் அவர்களைப் பின்தொடர்ந்தார். அந்தக் கிராமப்புறத்தில் இருந்த ஒரு தானியக் கூடத்தில் ஆன் அம்மையார் தங்க அனுமதிக்கப்பட்டார்.

### பாடுகளின் தொடர்ச்சி:

இருபது மாதங்கள் பெரும்பாடுபட்ட பிறகு ஜட்சன் பர்மிய அரசின் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டார். ஆறு வாரங்கள் அவர் இந்தப் பணியைச் செய்தபிறகு வீட்டுக்குச் செல்ல அனுமதி கிடைத்தது. ஆனால் அவர் வீடு சென்றபோது அவருக்குக் காத்திருந்த காட்சி அவர் மனதை அதிகமாக உருக வைத்தது. வீட்டின் ஒர் அறையிலே ஒரு பர்மியப் பெண் அரை பட்டினியாகக் கிடந்த ஒரு பிள்ளையோடு இருந்தாள். அடுத்த அறையிலே ஆன் அம்மையார் கடுமையான காய்ச்சலினால் பீடிக்கப் பட்டவராகப் படுத்திருந்தார். ஆன் அம்மையார் குணம் அடைந்த பின்னர், குடும்பமாக ஆம்கஸ்ட்டு என்ற இடத்திற்கு மாறிச் சென்றார்கள். அங்கே அம்மையாரை விட்டுவிட்டு ஜட்சன் பிரிட்டிஷ் கமிஷனர் அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஆவா பட்டணத்திற்குச் சென்றார்.



வேதாகமம் முழு உலகிலும் மிகவும் மகிழ்ச்சிகரமான புத்தகம் ஆகும்; அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. - சார்லஸ் ஸ்பர்ஜன்

ஜட்சன் அங்கு இருக்கும்போது ஆன் அம்மையார் இறந்த செய்தி அவருக்குக் கிடைத்தது. மனைவியின் இறுதி நேரத்தில் உடன் இருக்க முடியாத நிலையினை எண்ணி ஜட்சன் துக்கப்பட்டார். சில மாதங்களுக்குள் தன் அருமையான பெண் குழந்தையையும் இழந்தார். இந்நிகழ்ச்சி அவருடைய துக்கத்தை இன்னும் அதிகப்படுத்துவதாகவே இருந்தது. துக்கத்தாலே பாரம் அடைந்த அவர் தன் சரீரத்திலேயும் அதிகமாகத் தொய்ந்து போனார். இந்நிலைமையில் இருந்த ஜட்சன் மக்கள் கூட்டத்திலிருந்து தன்னைத்தானே தனிமைப் படுத்திக் கொண்டு அண்மையில் இருந்த காட்டில் ஒரு சிறிய குடிசை அமைத்து அதில் சில காலம் தங்கியிருந்தார். இச்சூழ்நிலையிலும் நடந்த எல்லாக் காரியங்கள் மூலமாக தன்னை ஆண்டவர் தமது அருகில் அதிகமாகச் சேர்த்துக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகத் தான் ஏற்படுத்தி இருக்கிறார் என்று ஜட்சன் உணர்ந்தபடியால், அவர் ஆண்டவருடைய அழைப்பையோ அவர் தனக்குச் செய்த காரியங்களைப் பற்றியோ கேள்விகள் கேட்கவில்லை. அதன்பிறகு அவர் மௌல்மீன் என்ற ஊரில் ஆண்டவருடைய வார்த்தையைப் பிரசங்கிக்கவும் தொடர்ந்து ஆண்டவருடைய வார்த்தையை மொழிபெயர்க்கவும் ஆரம்பித்தார். பின்பு சபையும் அங்கே உண்டானது. 1834ஆம் ஆண்டு முழு வேதாகமமும் பர்மிய மொழியில் வெளிவந்தது. 1840ஆம் ஆண்டு அது முழுவதுமாகத் திருத்தி அமைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், 100க்கும் அதிகமான மக்களுக்கு ஞானஸ்நானமும் அளிக்கப்பட்டது. கடுமையான உழைப்பினால் அவர் பலம் முழுமையும் குன்றி, காசநோயினால் பாதிக்கப்பட்டார்.

### இறுதி ஓட்டம்:

33 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னரே ஜட்சன் தனது தாய்நாடாகிய அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்றார். என்றாலும் அவர் அங்கே அதிகநாள் தங்கியிருக்க விரும்பவில்லை. மீண்டும் அவர் பர்மாவுக்குத் திரும்பினார். திரும்பியவர் திரும்பவும் தன் தாய்நாட்டைக் காணவே இல்லை. அவர் பர்மிய மொழியில் ஒரு சொல்லகராதியை அமைத்து முடித்தார். தனக்கு சுகம் கிடைப்பதற்காக அவ்வப்போது கடல் யாத்திரை செய்தார். அவ்விதமாக 1850ஆம் ஆண்டு செய்த கடற்பயணம் ஒன்றில் அவர் மரித்தார்.

"இந்த பர்மாவில் சிலுவை நிரந்தரமாக நாட்டப்படும் வரைக்கும் நான் இந்த இடத்தைவிட்டுச் செல்வது இல்லை" என்று இளைஞனாக இருக்கும்போதே வைராக்கியமாகத் தீர்மானித்து இருந்தார். அதன் பயனாக 30 ஆண்டுகள் கழிந்த பிறகு பர்மாவில் 63 ஆலயங்களும், 163 அருட்பணியாளர்களும் ஊழியர்களும், ஆண்டவரை ஏற்றுக்கொண்ட 7000-க்கும் மேலானவர்களும் இருந்தார்கள். இயேசு கிறிஸ்துவை தங்கள் வாழ்க்கையிலே சொந்த இரட்சகராக ஏற்காதவர்கள் நித்திய தண்டனைக்கு உட்பட்டவர்கள் என்பதை ஜட்சன் பூரணமாக நம்பினார். ஆகவே, அவர்தனக்கு இருந்த மேலான வசதிகள், தன்னுடைய வாழ்க்கையின் இலட்சியங்கள், தனக்கு அருமையானவர்கள் எல்லாரையும் விட்டுவிட்டு, துன்பம், வேதனை, கொடுமைகள் இவைகள் எல்லாவற்றையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். பர்மிய மக்களுக்கு இயேசு கிறிஸ்துவை எடுத்துரைப்பதற்கு முன்வந்தார்.

"நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவன், ஏற்றுக்கொண்டவள்" என்று அறிக்கை செய்கிற நீ, உன்னுடைய நண்பர்கள் நடுவிலே, இன்னும் பிற நாடுகளிலே உள்ள மக்கள் மத்தியிலே ஆண்டவரை அறியாதவர்களாய் இருப்பவர்களைப் பற்றிய ஒரு கரிசனை நிறைந்த நிலைமையிலே இருக்கிறாயா? ஆண்டவரை அறியாத மக்கள் இருக்கும் ஒர் இடத்திற்கு, ஒரு நாட்டிற்கு நீ செல்ல வேண்டும் என்று ஆண்டவர் உன்னைத் திட்டமாக அழைத்தால் நீ அங்கு செல்ல ஆயத்தமா?

**[தியோடர் வில்லியம்ஸ் எழுதிய "சிலுவையின் ஊழியர்கள்" (IEM Outreach பப்ளிகேஷன்ஸ்) என்னும் புத்தகத்திலிருந்து]**



தேவனுடைய வார்த்தையை தியானிப்பது கடினமான எல்லா தருணங்களிலும் அமைதியையும் பலத்தையும் தரக்கூடியதாக இருக்கிறது என வேதாகமம் கூறுகிறது. - டேவிட் ஜெரேமியா

# 2026 லெந்துகால வேதவாசிப்புச் சவால்

**"இயேசுவைப் பாருங்கள். அவர் பிரச்சினையில் இருந்த ஒவ்வொரு சமயமும் தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தினார். அவர் சோதிக்கப்பட்டபோதும், சிலுவையில் பாடனுபவித்துக் கொண்டிருந்தபோதும் அவர் வார்த்தையைப் பயன்படுத்தினார்."** - திமோத்தி கெல்லர்




🤔 இந்த 2026 லெந்து நாட்களில் உங்கள் விசுவாசத்தில் வளர ஒரு அர்த்தமுள்ள வழியைத் தேடுகிறீர்களா?

🤔 இந்த 40 நாட்களில் கிறிஸ்துவின் சிலுவை தியாகத்தை தியானிக்கும் வேளையில், முழு வேதாகமத்தையும் ஒருமுறை முழுமையாக வாசித்துவிட விரும்புகிறீர்களா?

🤔 இந்த 2026 லெந்து நாட்களில் ஜெபம், உபவாசம் மற்றும் வேதவசனங்கள் மூலம் ஆவிக்குரிய வாழ்வில் வளர விரும்புகிறீர்களா?

🌟 ஆம் எனில், இந்த 2026 லெந்துகால வேதவாசிப்பு சவால் உங்களுக்கானது தான்... 👌

**இதன் சிறப்பு அம்சங்கள்:**💫

✅ 18 பிப்ரவரி 2026 முதல் 05 ஏப்ரல் 2026 வரை உள்ள 40 நாட்களில் முழு வேதாகமத்தையும் ஒருமுறை முழுமையாக வாசித்தல். (விடுபட்டவைகளை வாசிக்க வசதியான Catch Up days ஞாயிற்றுக்கிழமைகள் நீங்கலாக)

✅ அவற்றை ஆதியாகமம் ஆரம்பித்து வெளிப்படுத்தின விசேஷம் வரை என்ற வரிசையில் இல்லாமல், வேதாகம நிகழ்வுகள் அவை நடைபெற்ற கால வரிசையில் (Chronological Order) வாசித்தல்.

✅ தினமும் உபவாசம் மற்றும் ஜெபம் பற்றிய மேற்கோள்கள் மற்றும் ஜெபக் குறிப்புகள்.

✅ லெந்து நாட்களில் உங்களை வழிநடத்த தினசரி தியானங்கள்.

✅ கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மருத்துவ அம்சங்கள் குறித்த கட்டுரைகள்.

✅ லெந்து காலத்தில் நடைமுறைப்படுத்த ஆன்மீக ஒழுங்குகள்.

✊ இந்த சவால், 40 நாட்களில் முழு வேதாகமத்தையும் வாசிக்க உண்மையான உறுதிபூண்டு, தங்கள் விசுவாசத்தை ஆழப்படுத்தவும், கிறிஸ்துவின் தியாகத்தை தியானிக்கவும் ஆயத்தமாக உள்ளவர்களுக்கு மட்டுமே. ✊

உங்களுக்கு விருப்பமும் நேரமும் உண்டெனில் இங்கே கிளிக் செய்து அதற்கான குழுவில் இன்றே இணையவும்: https://chat.whatsapp.com/KFWcP2okkC7LJuze6NYWXa

நன்றி.

**- GODependence குழு**



## உங்களுக்குத் தெரியுமா?

### ஒரு மனிதனின் உயிர் எங்கே இருக்கிறது?

### பல நூற்றாண்டுகளாக இது ஒரு மர்மமாகவே இருந்தது.

18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில், பல நோய்களுக்கு உடலிலுள்ள கெட்ட இரத்தம்தான் காரணம் என்று நம்பப்பட்டது. இரத்தத்தை வெளியேற்றுதல் நோய்களைக் குணப்படுத்தும் என்று அவர்கள் நம்பினர். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் நோய்வாய்ப்பட்டிருந்த போது, மருத்துவ நடைமுறையின் ஒரு பகுதியாக 1799 டிசம்பர் 14 ஆம் தேதி அவரது இரத்தத்தில் நாற்பது சதவீதம் எடுக்கப்பட்டது.

ஒரு மனிதனின் உயிர் எங்கே அடங்கியுள்ளது என்பதை பைபிள் வெளிப்படுத்தியுள்ளது. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது." (லேவியராகமம் 17:11, பைபிள்). இது கிமு 1430 இல் எழுதப்பட்டது. இந்த மருத்துவ உண்மையை ஆசிரியர் எப்படி இவ்வளவு துல்லியமாக அறிய முடியும்? ஏனென்றால் மனிதகுலத்தைப் படைத்தவர் இந்த அறிவை எழுத்தாளரின் மனதில் பதிய வைத்தார்.

வேதாகமம் அதன் எழுதப்பட்ட காலத்தை விட உயர்ந்த அறிவை வழங்குகிறது. பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கப்படும் இந்த அற்புதமான புத்தகத்தை நீங்கள் படிக்க விரும்புகிறீர்களா?



**உங்களுக்கு தெரியுமா?**

இயேசுவைச் சந்திக்க வந்த ஞானிகள் எத்தனை பேர் என்று வேதாகமம் எங்கும் குறிப்பிடவில்லை, அவர்கள் கொண்டு வந்த பரிசுகளை அடிப்படையாகக் கொண்டு மூன்று பேர் எனக் கருதப்படுகிறது (மத்தேயு 2).



**உங்களுக்குத் தெரியுமா?**

மரணத்தை அனுபவிக்காதவர்களாக வேதாகமத்தில் பதிவாகியிருப்பவர்கள் ஏனோக்கும் எலியாவும் மட்டுமே (ஆதியாகமம் 5:24, 2 இராஜாக்கள் 2:11).



தேவனுடைய வார்த்தையும் ஆவியும் மட்டுமே சபையில் சீர்த்திருத்தத்தை உண்டாக்கும்.
- W. ராபர்ட் காட்ஃப்ரே

# 2026 இரமலான் மாத வேதவாசிப்புச் சவால்

❓ நீங்கள் 2026 இரமலான் காலத்தில் குறைக்கப்பட்ட வேலைநேரம் உள்ள சூழ்நிலையில் வேலை செய்பவரா?

❓ இப்படி கிடைக்கும் நேரத்தில் பரிசுத்த வேதாகமத்தை ஒருமுறை முழுமையாக வாசித்துவிட விருப்பம் உள்ளவரா?

❓இஸ்லாமியர்களைக் குறித்து அறிந்து கொண்டு அவர்களுக்காக ஜெபிக்க ஆர்வம் உள்ளவரா?

🌟 ஆம் எனில், இந்த 2026 இரமலான் மாத வேதவாசிப்பு உங்களுக்கானது தான்..👌




**இதன் சிறப்பு அம்சங்கள்:**💫

* 18 பிப்ரவரி 2026 முதல் 20 மார்ச் 2026 வரை உள்ள 31 நாட்களில் முழு வேதாகமத்தையும் ஒருமுறை முழுமையாக வாசித்தல்.

* அவற்றை ஆதியாகமம் ஆரம்பித்து வெளிப்படுத்தின விசேஷம் வரை என்ற வரிசையில் இல்லாமல், வேதாகம நிகழ்வுகள் அவை நடைபெற்ற கால வரிசையில் (Chronological Order) வாசித்தல்.

* உலகமெங்கிலும் உள்ள முஸ்லீம்களுக்காக ஜெபிக்க தினசரி குறிப்புகள்.

* இஸ்லாத்தை புரிந்துகொள்ள சுவராசியமான கட்டுரைகள்.

* முஸ்லீம்களுடன் வேதம் பற்றிப் பேச நடைமுறை ஆலோசனைகள்.

* தினமும் உபவாசம் மற்றும் ஜெபம் பற்றிய மேற்கோள்கள்.

* வாட்ஸ்அப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெவ்வேறு குழுக்கள்.

✊🏻 இந்த 2026 இரமலான் காலத்தில் 31 நாட்களில் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்கும் ஆர்வத்துடன், இஸ்லாமியர்களைக் குறித்து அறிந்து கொண்டு, அவர்களுக்காக ஜெபிக்கும் ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் இதில் இணைந்து கொள்ளலாம்.✊🏻

உங்களுக்கு விருப்பமும் நேரமும் உண்டெனில் இங்கே கிளிக் செய்து அதற்கான குழுவில் இணையவும்: https://chat.whatsapp.com/GO3IXjoFogw1UZXMVE1RIX

நன்றி.

**- GODependence குழு**

பரிசுத்த வேதாகமத்தை நாம் வாசித்து தியானிக்கும்போது, இந்த உலகில் தேவனுடைய ஜனங்களுக்கான அவருடைய சித்தத்தையும், அவருடைய திட்டத்தையும் நாம் கண்டுகொள்கிறோம்.

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

31 ஜனவரி 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்



















விடாமுயற்சியுடன் வேதாகமத்தை வாசிப்பதன் மூலம், உங்கள் மனதை வேத வசனங்களால் நிரப்பி வைத்துக்கொள்ளுங்கள். அப்போது அதன் மதிப்பையும் ஆற்றலையும் விரைவில் கண்டுபிடிப்பீர்கள். - ஜே சி ரைல்

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 16

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**வேதப்பகுதி: 2 தீமோத்தேயு**

1



2



3



4



5



6



7



8



9



10



https://forms.gle/gjn94hrrurfaqvBy5

- மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/02/2026 க்கு முன்பதாக அனுப்பவும்.
- சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 15மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 15 Iதீமோத்தேயு-இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள்

**வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 15**

- காயத்ரி இவாஞ்சலின்
- ஜான்ஸ்.ஜே
- லில்லி
- ரூபி ஜெனட்
- டி. ரேணுகா
- ஜி.ரீசல்
- ரெபேக்கா ஜி
- அமுதா ஜெகன்
- எஸ்.பாலிங் கிளாஸ்டோன் துரை
- காந்திமதி

**விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 15**

- டி. ரேணுகா
- ரெபேக்கா ஜி
- அமுதா ஜெகன்
- எஸ்.தனராஜா
- ஹெப்சிபா
- ஜெனிஃபா தங்கம்
- ரீசல்.ஜி

செய்தித்தாளை வாசிக்கிறவர் உலக நடப்பை அறிந்துகொள்கிறார். பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கிறவர் அவை ஏன் நடைபெறுகின்றன என்பதை அறிந்து கொள்கிறார்.

- பெயர் அறியப்படாதவர்

# பதில்கள்

**கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 15 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 15 1 தீமோத்தேயு-இல் கேட்கப்பட்ட வினாக்களுக்கான சரியான பதில்கள்**

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்: 15

➡ இடமிருந்து வலம்
1. நித்தியஜீவன் (6:12)
5. வேலை (3:1)
8. செத்தவள் (5:6)
10. பாவங்கள் (5:24)

⬅ வலமிருந்து இடம்
9. ஏவாள் (2:13)
11. சரீரமுயற்சி (4:8)

🔼 கீழிருந்து மேல்
7. தேவன் (2:5)
10. பாவி (1:15)

⬇ மேலிருந்து கீழ்
2. ஜீவனுள்ள (6:17)
3. கூலி (5:18)
4. தீமோத்தேயு (1:2)
5. வேர் (6:10)
6. நீதி (6:11)

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 15

1).1 தீமோத்தேயு 1 : 12
2). 1 தீமோத்தேயு 4 : 4
3).1 தீமோத்தேயு 1 : 15
4).1 தீமோத்தேயு 2 : 4
5). 1 தீமோத்தேயு 2 :11
6).1 தீமோத்தேயு 6 - 10
7).1 தீமோத்தேயு 5 : 3
8).1 தீமோத்தேயு 6:7
9).1 தீமோத்தேயு 4 : 8
10).1 தீமோத்தேயு 5 : 6


## ஆசிரியர் குழு

- பேதுரு தேவதாசன்
- அற்புதராஜ் சாமுவேல்
- ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
- ஏ. ஆர். பீட்டர்
- டெ. டென்சிங்
- டார்வின் நேசகுமார் அ
- ஷோபா தானியேல்
- ஜோசஃபீன் ஷைனி பால்
- கேதரின் சுஜி


நாம் உயிர்வாழ்வதற்கு சுவாசிப்பது எவ்வளவு அவசியமானதோ அதே போல நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பரிசுத்த வேதாகமம் அவசியமானது. நம் வாழ்க்கைக்கு தேவனுடைய வார்த்தையை விட மிகவும் அத்தியாவசியமானது என்று எதுவும் இல்லை. - ஜாக் W. ஹேவர்ட்

# சமாரியப் பெண்

## பதிவு செய்யப்பட்ட முதல் பெண் சுவிசேஷகர்

இயேசு சீகார் வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது, யாக்கோபின் கிணற்றருகே அமர்ந்தார். ஒரு சமாரியப் பெண் தண்ணீர் எடுக்க வந்தபோது, இயேசு அவளிடம், "குடிக்க எனக்குத் தண்ணீர் தருவாயா?" என்று கேட்டார். யூதர்கள் சமாரியர்களுடன் பழகுவதில்லை என்பதால் அவள் ஆச்சரியப்பட்டாள்.

உரையாடல் தொடர்ந்தபோது, இயேசு தாம் மக்களுக்குக் கொடுக்கப்போகும் தண்ணீரைப் பற்றிக் கூறினார். அதைக் குடிப்பவர் ஒருபோதும் தாகமடைய மாட்டார். அது அவனுக்குள் நித்திய ஜீவனுக்கு ஏதுவாகப் பொங்கி எழும் நீரூற்றாக மாறும். அந்தப் பெண் இயேசுவிடம் அந்தத் தண்ணீரைக் கேட்டாள், அதற்கு இயேசு, "நீ போய் உன் கணவனை அழைத்துக்கொண்டு வா" என்று பதிலளித்தார். "எனக்குக் கணவன் இல்லை" என்று அவள் பதிலளித்தாள். அவளுக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள் என்றும், அவள் அப்போதுடன் இருந்தவன் அவளுடைய கணவன் அல்ல என்றும் இயேசு அவளிடம் கூறினார். இறுதியாக, இயேசு தாம் மேசியா என்பதை அவளுக்கு வெளிப்படுத்தினார்.

பிறகு அந்தப் பெண் தன் ஊருக்குத் திரும்பிச் சென்று நடந்ததை அறிவித்தாள். அப்பொழுது சமாரியர்களில் பலர் ஊரிலிருந்து வெளியே வந்து இயேசுவைச் சந்தித்து, அவரை விசுவாசித்தார்கள்.



(யோவான் 4: 1-30; 39-42)

**சமாரியப் பெண்ணிடமிருந்து கற்றுக் கொள்ளும் பாடங்கள்:**

- சிலருடைய வாழ்க்கை முறை காரணமாக அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நாம் அடிக்கடி கருதுகிறோம், ஆனால் இது உண்மையல்ல. சில சமயங்களில், சற்றும் எதிர்பார்க்கப்படாத நபர்கள்கூட நற்செய்திக்குச் செவிகொடுக்கிறார்கள்.
- இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க வந்தார், எனவே, நாம் பாவத்தில் விழுந்துவிடாமல் எச்சரிக்கையாக இருந்துகொண்டே, ஆட்சேபிக்கத்தக்க வாழ்க்கை முறைகளில் வாழ்பவர்களுடன் ஈடுபட வேண்டும்.
- இந்தப் பெண்ணின் சாட்சியம் அநேகரை இயேசுவை விசுவாசிக்க வழிநடத்தியது, அதுபோலவே, நாமும் நற்செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற உந்துதலை உணர வேண்டும்.

**– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**


கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். இந்த வசனமானது உங்கள் விருப்பங்களை எல்லாம் தேவன் நிறைவேற்றுவார் என்பதை அல்ல, அவர் தமது விருப்பத்தை உங்கள் இருதயத்தில் விதைப்பார் என்பதைக் குறிக்கிறது. - ஜான் மெக்ஆர்தர்

# GODependence சமூக ஊடக தளங்கள்

## GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1.3K சந்தாதாரர்களையும் 281 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil







## GODependence  WhatsApp Channel

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.




CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R

## GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

- தமிழ் - +965 6596 2559
- ஆங்கிலம் - +91 95255 95265
- பிற மொழிகள் - +91 99628 34944

பரிசுத்த வேதாகமத்தைப் பற்றி அல்ல, பரிசுத்த வேதாகமத்தையே வாசியுங்கள். பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை ஆகும், பரிசுத்த வேதாகமம் மட்டுமே தேவனுடைய வார்த்தை. - R. A. டோரி

## 2 தீமோத்தேயு

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 66- கி.பி. 67
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 66
**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பவுல்
**புத்தக வகை :** கடிதங்கள்

### நூல் அறிமுகம்

- பவுல் தம் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் மீண்டும் ஒரு முறை சிறையில் அடைக்கப்பட்டதாகவும் அப்போது அப்போதுஇரண்டாம் முறையாகத் தீமோத்தேயுவுக்குத் கடிதம் எழுதியதாகவும் கூறப்பட்டுள்ளது. முதல் முறை போலல்லாமல் இம்முறை அவர் ஒரு சாதாரண குற்றவாளி போல் நடத்தப்பட்டார் (1:16; 2:9; 4:13) என்றும் குறிப்புத் தரப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் ஆசிரியர், தம் வாழ்வை எடுத்துக்காட்டாகக் கொண்டு பல அறிவுரைகளைத் தீமோத்தேயுவுக்கு வழங்குவதைக் காண்கின்றோம்

### சூழலும் நோக்கமும்

- மீண்டும் ரோமில் சிறையில் அடைக்கப்பட்ட அப்போஸ்தலன் பவுல் தனிமையாகவும் கைவிடப்பட்டதாகவும் உணர்ந்தார். தன்னுடைய பூமிக்குரிய வாழ்க்கை விரைவில் முடிவுக்கு வரப்போகிறது என்பதை பவுல் உணர்ந்தார். 2 தீமோத்தேயு புத்தகம் அடிப்படையில் பவுலின் "கடைசி வார்த்தைகள்" கொண்ட புத்தகம் ஆகும். திருச்சபைகள் மற்றும் குறிப்பாக தீமோத்தேயு மீது அக்கறை காட்ட பவுல் தனது சொந்த சூழ்நிலைகளைக் கடந்தார். பவுல் தனது கடைசி வார்த்தைகளைப் பயன்படுத்தி தீமோத்தேயுவையும் மற்ற எல்லா விசுவாசிகளையும் விசுவாசத்தில் நிலைத்திருக்க ஊக்குவித்தார் (2 தீமோத்தேயு 3:14) மற்றும் அவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க விரும்பினார் (2 தீமோத்தேயு 4:2).

### முக்கிய வசனங்கள்

2 தீமோ 1:7, 2 தீமோ 3:16-17, 2 தீமோ 4:2, 2 தீமோ 4:7-8

### புத்தகத்தின் சுருக்கம்

- பவுல் தீமோத்தேயுவை கிறிஸ்துவின் மீது பேரார்வத்துடன் இருக்கவும், உறுதியான கோட்பாட்டில் உறுதியாக இருக்கவும் ஊக்குவிக்கிறார் (2 தீமோ 1:1-2, 13-14). தேவபக்தியற்ற நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களைத் தவிர்க்கவும், ஒழுக்கக்கேடான எதிலிருந்தும் தப்பிக்கவும் தீமோத்தேயுவுக்கு பவுல் நினைவூட்டுகிறார் (2 தீமோ 2:14-26). இறுதிக் காலத்தில் கிறிஸ்தவ நம்பிக்கையிலிருந்து கடுமையான துன்புறுத்தல் மற்றும் விசுவாச துரோகம் இரண்டும் இருக்கும் (2 தீமோத்தேயு 3:1-17) எனவும், எனவே விசுவாசத்தில் உறுதியாக நிற்கவும், பந்தயத்தை வலுவாக முடிக்கவும் விசுவாசிகளுக்கான தீவிர வேண்டுகோளுடன் பவுல் முடிக்கிறார் (2 தீமோத்தேயு 4:1-8).

### புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- ஆபத்துக்களைப் பற்றி எச்சரிப்பதில் பவுல் மிகவும் அக்கறை கொண்டிருந்தார், அவர் மோசேயை எதிர்த்த எகிப்திய மந்திரவாதிகளின் கதையைப் பயன்படுத்தினார் (யாத் 7:11, 22; 8:7, 18, 19; 9:11). பழைய ஏற்பாட்டில் அவர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றாலும், இந்த மனிதர்கள் தங்கக் கன்றுக்குட்டியைக் கட்டத் தூண்டியதாகவும், மற்ற விக்கிரகாராதனைக்காரர்களுடன் கொல்லப்பட்டதாகவும் இஸ்ரவேலரின் வரலாறு கூறுகிறது (யாத் 32). கிறிஸ்துவின் சத்தியத்தை எதிர்ப்பவர்களுக்கும் அதே விதியை பவுல் கணிக்கிறார், அவர்களின் முட்டாள்தனம் இறுதியில் "அனைவருக்கும்" தெளிவாக்கப்படுகிறது (2 தீமோத்தேயு 3:9).

### நடைமுறைப் பயன்பாடு

- கிறிஸ்தவ வாழ்க்கையில், இயேசு கிறிஸ்துவால் பரலோகத்தில் வெகுமதி பெறப்படும் (2 தீமோத்தேயு 4:8) பரிசின் மீது நாம் நம் கண்களை வைத்திருக்க வேண்டும். தவறான கோட்பாடு மற்றும் தெய்வபக்தியற்ற நடைமுறைகள் இரண்டையும் தவிர்க்க நாம் முயற்சி செய்ய வேண்டும். தேவனுடைய வார்த்தையைப் பற்றிய நமது அறிவில் அடித்தளமாக இருப்பதன் மூலமும், வேதத்திற்கு விரோதமான எதையும் ஏற்க மறுப்பதில் உறுதியாக இருப்பதன் மூலமும் மட்டுமே இதை நிறைவேற்ற முடியும்.

### நூலின் அமைப்பு

1) முன்னுரை (வாழ்த்து) 1:1 - 2
2) தீமோத்தேயுவுக்கு அறிவுரை 1:3 - 2:13
3) தவறான போதனை குறித்து அறிவுரை 2:14 - 4:8
4) பவுலின் நிலைமை 4:9 - 18
5) முடிவுரை 4:19 – 22

GODDependence
தொகுப்பு: சகோ. டார்வின் நேசகுமார் ஏ.

# தமிழ் வேதாகமத்தின் வரலாறு

-முனைவர் T.S ராஜசேகர், பெங்களூர்

தேவன் மனிதர்களுடன் உறவுகொள்ள விரும்புகிறவர். உறவை உண்டாக்கவும், தக்கவைக்கவும் ஒருவரை ஒருவர் அறிவது அவசியம். தேவன் தம்மை நன்றாக அறிவார். ஆனால், அவர் தம்மை வெளிப்படுத்தினால் மட்டுமே நம்மால் அவரைப் பற்றி அறிந்துகொள்ள முடியும்.




தேவன் தம்மை இயற்கை மற்றும் மனித வரலாற்றில் செயல்படுவதன்n மூலம் தம்மைப் பொதுவாக வெளிப்படுத்தி (General Revelation) இருக்கிறார். ஆனால், எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமம் மூலமாகவும், வாழும் வார்த்தையாகிய இயேசுவின் மூலமாகவும், தமது குணநலன்கள், நோக்கம், மனிதரிடம் அவர் எதிர்பார்ப்பவை போன்றவற்றை சிறப்பான வெளிப்படுத்தலாகக் (Special Revelation) கொடுத்துள்ளார்.

தேவன் தமது ஊழியர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்குத் தாம் அகத் தூண்டுதலாகக் கொடுத்த செய்தியை எழுதவைத்தார். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலால் அந்த நூல்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டு 66 புத்தகங்கள் அடங்கிய தொகுப்பாக வேதாகமம் விளங்குகிறது. இந்நூல்கள் அவை எழுதப்பட்ட மக்களுக்கு அவர்களது தாய்மொழியில் (பழைய ஏற்பாடு எபிரேயத்திலும், புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும்) எழுதப்பட்டன. நாம் தேவனை அறிந்து உறவு கொள்ள நமது தாய்மொழியாகிய தமிழில் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்ட வரலாற்றைக் காண்போம்.

### தமிழ் வேதாகமத்தின் வரலாற்று மைல்கற்கள்:

தமிழ் மொழி வேதாகமம் தேவனுடைய கிருபையினாலே நமக்குக் கிடைத்தது. 1706-ஆம் வருடத்தில் இரண்டு ஜெர்மானிய வாலிபர்கள் தரங்கம்பாடிக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவரான **சீகன்பால் (Ziegenbalg)** 1708-ல் தமிழ் புதிய ஏற்பாடு மொழிபெயர்ப்பு வேலையை ஆரம்பித்து, 1714-ல் புதிய ஏற்பாட்டை வெளியிட்டார். இதுவே இந்திய அல்லது ஆசிய மொழிகளிலே வெளியான முதல் புதிய ஏற்பாடு ஆகும். அவர் 1719-ல் மரித்தார். அதன் பின்னர்.

- **பெஞ்சமின் சுல்ஸ்:** சீகன்பால் விட்டுச் சென்ற பழைய ஏற்பாடு மொழிபெயர்ப்புப் பணியை முடித்து 1723 முதல் 1727 வரை நான்கு பகுதிகளாக வெளியிட்டார்.
- **பப்ரிசியஸ் (Fabricius)**: 1772-ஆம் வருடத்திலே புதிய ஏற்பாடை சற்று முன்னேற்றம் செய்து வெளியிட்டார்.
- **ரேனியஸ் (Rhenius):**திருநெல்வேலி பகுதியிலே ஊழியம் செய்த இவர் 1833-ல் புதிய ஏற்பாட்டையும், 1840-ல் முழு வேதாகமத்தையும் வெளியிட்டார்.
- **பெர்சிவல் மற்றும் ஆறுமுக நாவலர்:** 1850 இல் பரீட்சார்த்த மொழியாக்கம் வெளியிடப்பட்டது. இந்த நேரத்தில் தான் 'சர்வேஸ்வரன்' அல்லது 'பராபரன்' என்பதற்குப் பதிலாக 'தேவன்' என்ற வார்த்தை அறிமுகப்படுத்தப்பட்டது.
- **யூனியன் பதிப்பு (1871):** பல மிஷன் சங்கங்கள் இணைந்து ஹென்றி பவர் தலைமையில் ஐக்கிய மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது. 1871-இல் வெளியிட்ட இந்த 'பவர் டிரான்ஸ்லேஷன்' தான் கடந்த 150 வருடங்களாக நம்முடைய கரங்களிலே இருக்கிறது.


மரித்துப் போன ஆத்துமாக்களை உயிர்பெறச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் மாபெரும் கருவி தேவனுடைய வார்த்தை. - டி.எல் மூடி

**நவீன மொழிபெயர்ப்புகள்:**

- **திருவிவிலியம் (1995):** கத்தோலிக்க மற்றும் ப்ரோடஸ்டன்ட் மொழிபெயர்ப்பாளர்கள் இணைந்து பொது மொழிபெயர்ப்பாகக் கொண்டு வந்தார்கள். இதனுடைய மொழிநடை சிறப்பாக இருந்தாலும் சாதாரண மக்களுக்குப் புரிய கடினமாக உள்ளது.
- **பரிசுத்த பைபிள் (Easy to Read Version):** வேர்ல்ட் பைபிள் டிரான்ஸ்லேஷன் சென்டர் (WBTC) மூலமாக இது வெளியிடப்பட்டது.
- **சமகாலத் தமிழ்:** மொழிபெயர்ப்பு வேதாகமம் (Biblica) என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது.
- **ரீ எடிட்டட் வெர்ஷன் (Re-edited Version):** பைபிள் சொசைட்டி 2017-ல் புதிய ஏற்பாட்டையும், 2024-ல் முழு வேதாகமத்தையும் வெளியிட்டுள்ளது. . இதில் நீண்ட வாக்கியங்கள் எளிமையாக்கப்பட்டுள்ளன மற்றும் சில முக்கிய மொழிபெயர்ப்புத் தவறுகள் சரி செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக, நீதிமொழிகள் 5:16: பழைய பதிப்பில் "ஊற்றுக்கள் வெளியிலே பாய்வதாக" என்று இருந்ததை, "வெளியிலே பாய வேண்டாம்" என்று மாற்றியுள்ளனர். 1 கொரிந்தியர் 12:7: ஆவியின் வரங்கள் "சொந்த பிரயோஜனத்திற்காக" என்பதற்குப் பதில் "பொது பிரயோஜனத்திற்காக" என்று திருத்தப்பட்டுள்ளது. லூக்கா 2:32 : உம்முடைய இரட்சணியத்தை என் "கண்கள் கண்டது" போன்ற இலக்கணப் பிழைகளை "கண்கள் கண்டன" என்று இலக்கணப்படி மாற்றியுள்ளனர்.

வெவ்வேறு மொழிபெயர்ப்புகளையும் பயன்படுத்திக் கற்றுக் கொள்ளும்போது வேதத்தின் பொருளைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

**கேள்வி - பதில் உரையாடல்:**

கேள்வி-பதில் பகுதியில் தற்காலத் தமிழ் வேதாகமப் பயன்பாடு குறித்த பல சிக்கல்கள் விவாதிக்கப்பட்டன.

**கேள்வி:** ரீ எடிட்டட் வெர்ஷன்-ல் சமஸ்கிருத சொற்களுக்கு பதில் தமிழ் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளதா?
**பதில்:** இல்லை, மக்கள் திடீரெனப் பெரிய மாற்றங்களை ஏற்க மாட்டார்கள் என்பதால் வடமொழிச் சொற்கள் பெருமளவு மாற்றப்படவில்லை. இலக்கணப் பிழைகள், பன்சுவேஷன் மற்றும் புரியாத சில சொற்கள் மட்டுமே மாற்றப்பட்டுள்ளன (எ.கா: 'கொம்மை' என்பது 'காவல் கோபுரம்' என மாற்றப்பட்டுள்ளது).

**கேள்வி:** டிஜிட்டல் பைபிள் (மொபைல்) பயன்படுத்துவது குறித்து உங்கள் கருத்து என்ன?
**பதில்:** பேப்பரில் பிரிண்ட் பண்ணப்பட்டது தான் பைபிள் என்று சொல்வதை நான் ஏற்பதில்லை. மொபைலில் வேதாகமம் வாசிப்பதில் கவனச்சிதறல் (Distraction) ஏற்பட வாய்ப்பிருந்தாலும், அடுத்த தலைமுறைக்கு அதுவே பைபிளாக மாறிவிடும் சூழல் இருப்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். பல மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டுப் படிக்க அது வசதியாக இருக்கிறது.

**கேள்வி:** 'தேவன்' என்ற வார்த்தைக்குப் பதிலாக வேறு சொற்களைப் பயன்படுத்தலாமா?
**பதில்:** 'தேவன்' என்ற சொல் ஆண்பால், பெண்பால் மற்றும் பன்மைத் திரிபுகளைக் கொண்டது. 'கடவுள்' அல்லது 'இறைவன்' என்பதை விட அதற்குப் பதிலாக 'தெய்வம்' என்ற சொல்லைப் பயன்படுத்தினால் அது திரித்துவத்தைக் குறிக்க இன்னும் சிறப்பாக இருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து. ஆனால் எந்த மொழிபெயர்ப்பும் அதை இன்னும் கொண்டு வரவில்லை.

**கேள்வி:** NIV போன்ற பதிப்புகளில் சில வசனங்கள் விடுபட்டிருப்பது குறித்து?
**பதில்:** இவை Earliest Manuscripts-ன் அடிப்படையில் அமைந்தவை. பிந்தின காப்பிகளில் காப்பி செய்தவர்கள் மூலமாகச் சேர்ந்த சில வார்த்தைகள் இதில் விடுபட்டிருக்கலாம், ஆனால் அவைகள் அடிக்குறிப்பில் கொடுக்கப் பட்டுள்ளன. இது வேதத்தின் மீதான வெறுப்பினால் செய்யப்பட்டது அல்ல.

- **முனைவர் T.S ராஜசேகர், பெங்களூர்.**

(வேதாகம மொழிபெயர்ப்பு பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அனுப்புங்கள்...
அடுத்த மாத இதழில் இக்கட்டுரை ஆசிரியர் பதிலைப் பகிர்ந்துகொள்வார்)

தேவனை நாம் அறிந்து கொண்டு, அவருடனான உறவை அனுபவிப்பதற்கு முன்பு பரிசுத்த வேதாகமத்தில் உள்ள வேத வாக்கியங்கள் ஒரு கதைப் புத்தகத்தில் உள்ள சாதாரணமான வார்த்தைகளாக இருந்தன. ஆனால், நாம் தேவனை அறிந்துகொண்டபோது, வேத வசனத்தைப் பற்றிய நம் எண்ணம் முற்றிலும் மாறியது. - டாம் ஆலன்

# சாட்சி - சகோதரி. சாந்தினி -நாகர்கோவில்.

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

என் பெயர் எஸ்தர் சாந்தினி, எனது ஊர் நாகர்கோவில். சிறு வயதிலிருந்தே தேவனை அறிந்த குடும்பம் எங்கள் குடும்பம். படித்ததும் கிறிஸ்துவ பள்ளி ஆனதால் தேவனோடுள்ள உறவில் இணைந்து வளர கிருபை கிடைத்தது.

**நீங்கள் இதுவரை முழு பைபிளையும் எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்? அதில் எத்தனை முறை GODependence திட்டத்தின் மூலம்?**

ஆண்டவருடைய பெரிதான கிருபையால் நான் சராசரியாக 18 முறை பரிசுத்த வேதத்தை வாசித்து முடிக்க தேவன் கிருபை செய்திருக்கிறார். GODependence வேத சவால்கள் மூலம் 13 முறை வாசித்து முடிக்க தேவன் கிருபை செய்தார்.

முதலாவது என்னுடைய 16 வது வயதில் வேதம் வாசித்த போது ஒரு பொருத்தனையோடு வாசித்தேன். பத்தாம் வகுப்பு பொது தேர்வு என்பதால் அந்த வருடம் வேதம் வாசித்து முடிக்க தினமும் காலையும் மாலையும் நேரம் ஒதுக்கி வாசித்து முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். அதன்பின்பு 4 முறை 1 வருடம் வாசிப்பு திட்டம் மூலம் வாசித்திருக்கிறேன்.

நான் தற்போது குவைத் தேசத்தில் வேலை பார்க்கிறேன். 2019-2020 ம் வருடம் எங்கள் CMF சபையில் செய்தி கொடுக்க வந்த Dr. பேதுரு என்று ஒரு ஊழியர் மூலமாக GODependence பற்றி அறிந்து கொள்ள முடிந்தது. அது கொரோனா காலகட்டமானதால் Lockdown நேரமாயிருந்த படியால் இந்த GODependence திட்டத்தின் மூலமாக அந்த வருடம் 4 முறை வேதத்தை வாசித்து முடிக்க கர்த்தர் கிருபை செய்தார்.

**GODependence குழுவின் முறை உங்களுக்கு எவ்வாறு உதவியது?**

GODependence திட்டம் மூலம் வாசிப்பது எளிதாகவும் அநேக முறை வாசித்து முடிக்க உதவியாகவும் இருப்பதால் அதிகமாய் வேதத்தை வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டானது. அநேக முறை 1 மாதம், 2 மாதம், 3 மாதம், 4 மாதம் திட்டங்களில் இணைந்து சான்றிதழ் மற்றும் பரிசுகளும் பெற கர்த்தர் கிருபை செய்தார்.

முக்கியமாக ரம்ஜான் போன்ற மாதங்களில் 1 மாதம் வாசிப்பு திட்டம் மிக challenging ஆக இருந்தது. ஆனாலும் கர்த்தருடைய கிருபையாலும் சரியான திட்டமிடுதலுடன் கூடிய WhatsApp மூலமாக அனுப்ப பெற்ற daily reading portions மூலமாக அவற்றை வாசித்து முடிக்க முடிந்தது.

## சாட்சி - சகோதரி. சாந்தினி ....

**நீங்கள் பரிசுத்த வேதாகமம் வாசிக்கும்போது ஏற்பட்ட தடங்கல்கள் என்ன? அவற்றை எவ்வாறு மேற்கொண்டீர்கள்?**

அநேக முறை Bible read செய்ய முடியாதபடி சோர்வுகள் வந்ததுண்டு. வாசிக்க தொடங்கி முடிக்காமல் விட்ட நாட்களும் உண்டு் வேதவாசிப்பு குறையும் போது உலகபிரகாரமான காரியங்களில் சிக்குண்டு தேவனை விட்டு தூரம் போயிருக்கிறேன். என்றாலும் ஒவ்வொரு முறையும் தேவன் கிருபையால் மீண்டும் அவருடைய வார்த்தையை வாசிக்க கிருபை தந்து கொண்டிருக்கிறார்.

**இறுதியாக, சில வரிகளில் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

GODependence team வழியாக அநேகரை கர்த்தர் இன்னும் தொடுவாராக. இன்னும் அநேகரை சாட்சியாக நிறுத்துவாராக.இந்த ஊழியம் இன்னும் அதிகமாய் பெருக வேண்டும். இந்த ஊழியத்தில் பங்கு வகிக்கிற ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**எட்னா மேரி** - தேனி.

★★★★★

நீங்கள் மாதாமாதம் வெளியிடுகிற பத்திரிக்கை ரொம்ப சூப்பர். அதில் மிகவும் அழகான செய்திகள் கொடுக்குறீர்கள். அனேக விஷயங்களை அதன் மூலம் நாங்கள் கற்றுக் கொள்ள முடிகிறது.

## வாசகர் வாய்ஸ்

இந்த செய்திமடலின் உள்ளடக்கங்களைச் சார்ந்த உங்கள் கருத்துக்கள், பின்னூட்டங்கள், சாட்சிகள் மற்றும் கேள்விகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு வாசகர்களை அன்புடன் அழைக்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்படும் பதிவுகள் ஒவ்வொரு மாதமும் GODependence செய்திமடலின் **வாசகர் வாய்ஸ்** பகுதியில் வெளியிடப்படும்.

உங்கள் வாய்ஸ் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மாதமும் உங்களிடமிருந்து கேட்க ஆவலுடன் எதிர் நோக்குகிறோம்.

**+965 6596 2559**

தேவனுடைய வார்த்தையானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையதாக இருக்கிறது. அதனுடன் ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட் போட்டி போட முடியாது. - ஜோசப் ஸ்டோவெல்

# GODependence நிகழ்வுகள்

1

## தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி (Bible Readathon) - 25.02.2026 மலையாள மொழியில்




2026 ஆம் ஆண்டில் மாதந்தோறும் ஒரு தொடர் வேதவாசிப்பு (Bible Readathon) நிகழ்ச்சிகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டது. அதன்படி ஜனவரி மாதம் 26 ம் தேதி அன்று ஆங்கில மொழியில் தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த மாதத்திற்கான Bible Readathon 25 பிப்ரவரி 2026 அன்று மாலை இந்திய நேரம் 6 மணி முதல் 10 மணி வரை மலையாள மொழியில் நடைபெற உள்ளது.

நல்ல இணைய (Internet) வசதியும் மலையாள மொழியில் சரளமாக வேதாகமம் வாசிப்பவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

2




## GODependence கருத்தரங்கு - பிப்ரவரி 2026

**தலைப்பு: இருதயம் முக்கியம்: டிஜிட்டல் உலகில் எல்லைகளும் பரிசுத்தமும்**

(அன்பு என்பது- உண்மையான அன்பு என்ன? நமது இதயத்தை எப்படி காக்கலாம்? டிஜிட்டல் உலகில் எல்லைகள் – ஏன் அவை அவசியம்? நமது உடலில் தேவனை மகிமைப்படுத்துவது எப்படி? நமது உடல் தேவனுடைய ஆலயமாக இருப்பதின் முக்கியத்துவம் என்ன? என்பவற்றை புரிந்துகொள்ள உதவும் கருத்தாழம் நிறைந்த கருத்தரங்கு மற்றும் அர்த்தமுள்ள கலந்துரையாடல்)

**நாள்:** **15 பிப்ரவரி 2026 ஞாயிறு இந்திய நேரம் இரவு 8:00 முதல் 9:00 மணி வரை**

**கருத்துரை:** **Dr. Diana Thamby Ebenezer, குவைத்.**

3

## வேத தியான குழுக்கள் (BMG) - பயிற்சி அமர்வுகள்

**மீண்டும் தொடங்க திட்டமிட்டிருந்த வேத தியானக் குழுக்கள் (BMG) தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால், இதுவரையும் தொடங்கப்படவில்லை.**

வேத தியானக் குழுக்களில் இணைய விரும்புபவர்களுக்காக "தேவனுடைய வார்த்தைகளை தியானிப்பது எப்படி" என்ற தலைப்பில் பயிற்சி நிகழவுகள் திட்டமிடப்பட்டு நடைபெற வேண்டும். ரமலான் மற்றும் லெந்து கால வேதவாசிப்பு சவால்கள் நிறைவடைந்த பின்னர், இந்த நடவடிக்கைகள் தடையில்லாமல் முன்னெடுக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.



FOLLOW US!

GODependence **வேதவாசிப்பு சவால்கள்**

+965 6596 2559

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence

GODependence


தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.


பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒரு வசனமானது நான் வாசித்த எல்லா புத்தகங்களைக் காட்டிலும் அதிகமாக எனக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. - இம்மானுவேல் காண்ட்